**மகரகம மாநகர சபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பொலன்னறுவை மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181 ஆம் பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பொலன்னறுவை மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்த தொடர்பைக் கொண்டுள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**கணக்காய்வு அவதானிப்புக்கள் சபையின் கருத்துரை பரிந்துரை**

| பந்திக் குறிப்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2.2 | 607629 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கு 2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மூடப்பட்டிருந்த போதிலும் பணத் தொகையின் கீழ் ரூ.2,052,258 பெயரளவுப் பெறுமதியாக மதிப்பீட்டாண்டிலும் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. | பெயரளவுப் பெறுமதியை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 நிதி அறிக்கைகள்**

**1.6.1 நிதி விளைவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | நிதி மற்றும் ஊடக அமைச்சின் 2018 டிசம்பர் 31 அம் திகதியுடையதும் 4/2018 ஆம் இலக்க அதன் முகாமைத்தவச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் களுக்கு அமைவாக 2020 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும் போது நிறுவனத்துக்குச் சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் | இவ் வருடத்தில் இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சகல நிலையான சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் பதியப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என உள்ளூராட்சி சபை உதவி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆம் திகதியுடையதும் LGD/10A/4/න.ශි/2019 ஆம் இலக்கமுடையதுமான கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதும் நகர சபையினால் மதிப்பீட்டாண்டிலும் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மதிப்பீட்டாண்டுக்கான மூலதனப் பங்களிப்பாக ரூ. 23,789,981 கிடைக்கப் பெற்றிருந்தபோதும் விரிவான வருமான அறிக்கையின் 10 ஆம் இலக்கத்தின் கீழ் மூலதனப் பங்களிப்பு காட்டப் பட்டிருக்கவில்லை. | இது குறிப்பு இலக்கம் 10 இல் உள்ளடக்கப் படவில்லை எனினும் குறிப்பு இலக்கம் 04 இன் கீழ் மாகாண சபைகளின் ஏனைய பங்களிப்புகளின் கீழ் பௌதீக திட்டங்கள் என்ற நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானம் விரிவான வருமானமொன்றாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய வருடத்துக்குறிய ரூ. 97,582,197 மூலதனப் பங்களிப்புப் பெறுமதியில் நூற்றுக்கு 10 வீதம் என்ற அளவு அதாவது ரூ. 9,758,220 இனை விரிவான வருமான அறிக்கையில் மீண்டெழாத செலவுகளுக்கான அரசின் பங்களிப்பின் கீழ் காட்டப்பட வேண்டும் எனினும் அது நிதி அறிக்கைகளில் காட்டப் பட்டிருக்க வில்லை. | குறிப்பிலக்கம் 05 இனை மீண்டும் தயாரித்து விரிவான வருமான அறிக்கைக்கும் 2022 ஆண்டுக்கான கணக்குகள் தயாரிக்கப் படும்போது இவை உட்படுத்தப்படும் என தெரிவித்துக் கொள்கின்றேன். | -அதே- |
| (ஈ) | முன்னைய ஆண்டின் மூலதனப் பங்களிப்புப் பெறுமதியில் குறிப்பு இலக்கம் 5 இன் கீழ் காணப்படும் பெறுமதிகளின் ஒப்பீடுகளின் பின் மிகுதிப் பெறுமதி மற்றும் மதிப்பீட்டாண்டில் மூலதனப் பங்களிப்புப் பெறுமதி சொத்துக்கள் பொறுப்புக்கள் அறிக்கையில் இனங்காணப்பாடாத மூலதனப் பங்களிப்பின் கீழ் ரூ. 111,613,958 என காட்டப் பட்டிருக்க வேண்டும் எனினும் நிதி அறிக்கைகளில் அவ்வாறு காட்டப்பட்டிருக்க வில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - அதே - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2021 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி சபை நிதியிலிருந்து ரூ. 161,753,480 செலவு செய்யப்பட்டு 204 செயற் திட்டங்களின் பணிகள் முடிக்கப் பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்களின் மொத்தப் பெறுமதிகள் சொத்துக்கள் பொறித் தொகுதிகள் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வில்லை. | சரி செய்யப் படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நிர்மானப் பணிகள் முடிவுறுத்தப் பட்ட சகல செயற் திட்டங்களும் மூலதனச் சொத்துக்களில் சேர்க்கப்பட வேண்டும். |
| (ஊ) | சபை நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட ரூ. 22,205,682 பெறுமதிவாய்ந்த முடிவுறுத்தப்படாத 10 செயற்திட்டங்களின் பெறுமதிகள் முடிவுறுத்தப்படாத பணிகளின் கீழ் நிதி அறிக்கைகளில் கணக்கீடு செய்யப் பட்டிருக்க வில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | முடிவுறுத்தப்படாத பணிகள் அதற்குறிய கணக்குகளில் காட்டப்படல் வேண்டும். |
| (எ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 ஆகஸ்ட் மாத LGD/09/4/2019(1) ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் படி சகல ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும் எனினும் பாதைகள், மதகுகள் மற்றும் பாலங்களின் பெறுமதிகள் கொடுக்கப்பட்டு ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை என்பதுடன் அதன் பெறுமானத் தேய்வுகளும் கணக்கீடு செய்யப் பட்டிருக்க வில்லை. | இத் தவறுகள் 2022 ஆண்டுக்கான கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரி செய்யப்படும். | சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் படி பணியாற்ற வேண்டும். |
| (ஏ) | ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான குறிப்பில் நூலகத்தின் புத்தகங்கள் நீக்கப்பட்டமைக்கான தேய்மானங்கள் மற்றும் ஆதனங்கள் விற்பனை செய்யப் பட்டமை தொடர்பான கிரயம் பெறுமானத் தேய்வு அகற்றப்பட்டு சீர் செய்யப் பட்டிருக்க வில்லை. | நூலகத்தின் புத்தகங்கள் நீக்கப்பட்டமை சீர் செய்யப் பட்டதுடன் பெறுமானத் தேய்வும் செய்யப்பட்டுள்ளது. | அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் குறிப்பில் இல்லை என்பாதால் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | வருமான அறிக்கையின் படி ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் இருப்பு மீதி ரூ. 64,387,924 என்றிருந்த போதிலும் உண்மையான இருப்பு மீதிகளின் பெறுமதி ரூ. 31,896,139 என்பதால் ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு ரூ. 32,491,785 மேலதிகமாக கணக்குகளில் சேர்க்கப் பட்டுள்ளது என்பதால் கணக்கீட்டுக் காலப்பகுதிகளின் குறைபாடுகள் அதிகரித்திருந்தது. | 2020 ஆம் ஆண்டில் பெறுமானத் தேய்வு செய்யப்படாத இரண்டு வகை ஆதனங்கள் பெறுமானத் தேய்வு கணக்கினூடாக ஒப்பிடப்பட்டு திரட்டிய நிதியத்துடன் இணைக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது இவை சீராக்கப்படும். | சரியான பெறுமானத் தேய்வுகள் கணக்குகளில் காட்டப்படல் வேண்டும். |
| (ஒ) | நிலையான வைப்புக்களின் பேரில் பெறப்பட்ட வட்டிகள் கணிக்கப்பட்ட போது அரச நிறுவனங்களுக்கான நிறுத்தி வைத்தல் வரி (WHT) குறைக்கப்படக் கூடாது என்றிருந்த போதிலும் 03 நிலையான வைப்புகளுக்கு பெறப்பட்ட வட்டிகளின் மீது ரூ. 121,861 நிறுத்தி வைத்தல் வரி குறைக்கப்பட்டு கணக்கில் சேர்க்கப்பட்டதன் காரணமாக வருமானத்திலிருந்து அத் தொகை குறைக்கப்பட்டு கணக்கிடப் பட்டிருந்தது. | இது தேசிய சேமிப்பு வங்கியினால் மேற்கொள்ளப்படும் விடயமொன்றாகும். முன்னைய ஆண்டுகளிலும் இவ்வாறு சில நிலையான வைப்புக் கணக்குகளின் வட்டிகலிலிருந்து (WHT) குறைக்கப் பட்டிருந்தது. வட்டித் தொகையிலிருந்து (WHT) குறைக்க வேண்டாமென பல முறை இவ் வங்கிக்கு எழுத்து மூலம் அறிவித்த போதிலும் அதன் மீது அவர்கள் கவனம் செலுத்தவில்லை எனத் தெரிய வந்துள்ளது. இம் முறை வரி குறைக்கப் பட்டதையும் திருப்பித் தருமாறு எழுத்து மூலம் வங்கியிடம் வேண்டுகோள் விடுக்கப் படவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | சரியான வட்டிப் பெறுமதி கணக்கில் சேர்க்கப்பட வேண்டும். |
| (ஓ) | நிதிப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப் படும்போது செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் வருடத்தின் மேலதிகம் அல்லது பற்றாக்குறை என ரூ. 678,879,509 காட்டப் பட்டிருந்த போதிலும் விரிவான வருமான அறிக்கையின் படி பற்றாக்குறை ரூ.47,172,349 ஆக இருப்பதனால் ரூ. 631,707,160 வித்தியாசம் அவதாணிக்கப் பட்டது. | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வித்தியாசங்கள் இனங்காணப்பட்டு கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | நிதிப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்படுகளின் கீழ் ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு களுக்கு ரூ. 828,378,427 வும் இலாபப்பங்கு ரூ. 1,898,690 வும் பெற்றுக் கொள்ளப்பட்ட வட்டி ரூ. 6,178,215 மேலதிகமாக காட்டப் பட்டுள்ளது | -அதே- | வித்தியாசங்கள் இனங்காணப்பட்டு சரியான அறிக்கையிடப்பட வேண்டும். |
| ஔ) | நிதிப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்படுகளின் கீழ் கடன்களுக்காக செலுத்தப் பட்ட வட்டி ரூ. 204,348 ஆகவும் மூலதனச் செலவுப் பங்களிப்பு ரூ. 2,379,981 ஆகவும் மூலதனச் செலவுகளின் மூலச் செலவு ரூ. 68,962,914 கணக்குகளில் காட்டப் பட்டிருக்க வில்லை. அதேபோல் செலுத்தப்பட்ட கடன் ரூ. 2,400,000 மேலதிகமாக காட்டப் பட்டிருந்தது. | -அதே- | வித்தியாசங்கள் இனங்காணப்பட்டு சரியான அறிக்கையிடப்பட வேண்டும். |
| (க்) | மதிப்பீட்டாண்டுக்குறிய நிலையான வைப்புக்கான வட்டி ரூ. 17,618,530 என்றிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூ. 15,417,846 என குறிப்பிடப் பட்டுள்ளதன் காரணமாக ரூ. 2,200,684 வால் வருமானம் குறைக்கப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. | -அதே- | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (கா) | வருடத்துக்காக பெறப்பட வேண்டிய நிலையான வைப்பு வட்டியின் அளவு ரூ. 4,494,077 என்றிருந்த போதிலும் ரூ. 2,293,393 என கணக்கில் காட்டப் பட்டதன் காரணமாக கிடைக்கப்பெற வேண்டிய வட்டி ரூ. 2,200,784 குறைத்து கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. | -அதே- | - அதே - |

### 1.6.2 தயார் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்துக்கள் பொறுப் புக்கள் அறிக்கையின் படி திரட்டிய மேலதிகம் அல்லது பற்றாக்குறை ரூ. 678,879,509 என இருந்த போதிலும் உரிமை மாற்றல் அறிக்கையின் படி அது ரூ. 679,451,690 என கணக்குகளில் காட்டப்பட்டதன் காரணமாக ரூ. 572,181 | அது முன்பிருந்தே தொடர்ந்து வரும் வித்தியாசமாகும். பரிசோதித்து சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பேன். | வித்தியாசங்கள் இனங்காணப்பட்டு கணக்கு மீதிகள் சீர் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வித்தியாசம் கண்டுபிடிக்கப் பட்டது. | | |
| (ஆ) | நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள 09 கணக்கு மீதிகளுடன் தொடர்புடைய பயன்பாட்டு ஆவணங்கள் / அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் ஒப்பிடும் போது நிதி அறிக்கைகளில் ரூ. 37,568,135 மேலதிகமாகவும் ரூ. மற்றும் ரூ. 20,372,196 குறைவாகவும் காட்டப் பட்டிருந்தது. | அது பல வருடமாகத் தொடர்ந்து வரும் வித்தியாசமாகும். பரிசோதித்து சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பேன | -அதே- |
| (இ) | நகர அபிவிருத்தி நிதி முதலீட்டுக் கணக்கின் மீதி ரூ. 38,611,503 என்றிருந்த போதிலும் குறித்த வைப்புக் கணக்கின் மீதி ரூ. 45,472,612 ஆக காணப்படுவதால் ரூ. 6,861,109 வித்தியாசம் கண்டுபிடிக்கப் பட்டது. | வீட்டு வாடகைச் சபை அலுவலக ஊழியர் பணிக் குழுவுக்கான கொடுப்பனவுகள் ரூ. 6,000 செலுத்தப்படாத சம்பள வைப்பு அட்டவணையில் பதியப்பட்டதன் காரணமாக இது நிகழ்ந்துள்ளது. சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப் படும். | -அதே- |
| (ஈ) | அட்டவணையின் படி குப்பைகளை அகற்றுவதற்கு கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபைக்கு ரூ. 43,366,123 செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிதி அறிக்கைகளின் படி செலவு ரூ. 44,851,272 ஆக இருந்தமையால் ரூ. 1,485,149 வித்தியாசம் கண்டு பிடிக்கப்பட்டது. | காண்பித்துத் தரப்பட்ட மீதிகளின் உண்மைத் தன்மைகளை உறுதி செய்து கொள்வதற்கு குறிப்பெடுத்துக் கொண்டேன். | -அதே- |

### 1.6.3 கணக்காய்வுக்கான எழுத்துமூல சாட்சியம் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மொத்தமாக ரூ. 9,866,664 பெறுமதி வாய்ந்த 08 கணக்குத் தலைப்புகளுக்குறிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் கணக்காய்வின் போது அவற்றை மகிழ்ச்சிகரமாக ஆய்வுக்குட்படுத்த முடியவில்லை. | 2022 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதற்கான குறிப்புக்களை எடுத்துக் கொண்டேன். | விவரமான அட்டவணைகளை சமர்ப்பிக்க வேண்டும். |

## 1.6.4 வருமதிக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 முதல் 2021 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதிக்குரிய வாடிக்கையாளர்களால் சோலைவரி செலுத்துவதற்கு பெற்றுக் கொடுக்கப் பட்டிருந்த ரூ. 75,293 பெறுமதி வாய்ந்த 06 காசோலைகள், அறிவித்தற் பலகை கட்டணத்தின் பேரில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூ. 212,472 பெறுமதிவாய்ந்த 03 காசோலைகளும், கடை வாடகைக்காக பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூ. 40,950 பெறுமதிவாய்ந்த காசோலையும் நிராகரிக்கப் பட்டிருந்ததுடன் அவற்றுக்கான பணத் தொகைகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு சுட்டிக் காட்டிய நிராகரிக்கப்பட்ட காசோலைகளுக்கான பணத் தொகைகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப் பட்டுள்ளன. | அறவிடப்பட வேண்டிய பணத் தொகைகளை தாமதமின்றி அறவிடுவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும். |

## 11.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டம், விதிகள், ஒழுங்குமுறை மற்றும், முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமை

சட்டம், விதிகள், ஒழுங்குமுறை மற்றும், முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காத 05 சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டம், விதிகள், ஒழுங்குமுறை ஆகியவற்றுக்கான குறிப்புகள் | | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் குறிப்பு | | | |
| | நிதிப் பிரமாணக் குறிப்பு 396(ஈ) | பிறப்பிக்கப் பட்டதெனினும் பணமாக்கப்படுவதற்குச் சமர்ப்பிக்கப் படாமல் 06 மாதங்களுக்கு மேற்பட்ட 52 காசோலைகள் தொடர்பாக 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு சுட்டிக் காட்டிய 52 காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணக் குறிப்பு 396(ஈ)பிரகார ம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | **திறைசேரிச் சுற்றறிக்கை** | | | |
| | 1978 டிசம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் தெர்ப்பிலான ஆவணமொன்று பேணப்பட்டு வந்த போதிலும் இற்றைப் படுத்தப் பட்டிருக்க வில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை யின்படி பணியபற்ற வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் படி 2021 டிசம்பர் 31 அம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக சபையின் மீண்டெழும் வருமானத்தை மிஞ்சிய செலவாக ரூ. 47,172,349 காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவை மிஞ்சிய வருமானமாக ரூ. 331,691,844 ஆகவும் காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானச் சேகரிப்பு செயல்திறன்

சபையின் வருமானச் சேகரிப்பு செயல்திறன் சம்பந்தமான அவதானிப்புகள் பின்வருமாறு காணப்படுகிறது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **சோலைவரி, குத்தகை** | | |
| (i) | மதிப்பீட்டு ஆண்டில் விலைப் பட்டியலிடப்பட்ட சோலைவரி குத்தகை ரூ. 244,429,353 என்றிருந்த போதிலும் அதில் ரூ.55,556,313 என்ற நூற்றுக்கு 23 வீத வரிகளை அறவிடுவதற்கு சபை தவறியுள்ளது. மேலும் 2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை சோலைவரி மற்றும் குத்தகைகள் அறவிட முடியுமான ஆதனங்களின் எண்ணிக்கை 91132 ஆக இருந்ததுடன் அதில் 72504 குத்தகைதாரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைச் சோலைவரி மீதி ரூ 201,664,734 ஆக இருந்தது. | 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் கோவிட் நோய்த் தொற்று நிலைமை காரணமாக சோலைவரி செலுத்தல் குறைவடைந்தது. 2021 டிசம்பர் மாதம் 04 நடமாடும் சேவைகளும் 2021 ஆம் ஆண்டில் 35 நடமாடும் சேவைகளும் நடாத்தப்பட்டு நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ரூ.50,000 ஐ விட கூடிய நிலுவைப் பட்டியல் வருமானப் பரிசோதகர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2022 ஜனவரி 01 ஆம் திகதி முதல் தற்போது வரை மொத்த நிலுவைத் தொகையிலிருந்து ரூ.47,357,602 அறவிடப் பட்டுள்ளது. | சோலைவரி வருமாணத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்ளவும். |
| (ஆ) | **வாடகை** | | |
| (i) | மதிப்பீட்டாண்டுக்கு விலைப்பட்டியலிடப்பட்ட கடை வாடகை வருமானம் ரூ.23,305,410 என்றிருந்த போதிலும் அதில் ரூ 6,506,329 என்ற நூற்றுக்கு 28 | 2021 ஆம் ஆண்டு நிலவிய கொரோனா நோய்த் தொற்று நிலைமை காரணமாக விடுக்கப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மற்றும் நாடு மூடப்பட்டதன் காரணமாக | கடைகளுக்கான வாடகை நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வீதம் வருடத்தினுள் அறவிட்டுக் கொள்ள முடியாமல் போயுள்ளது. | கட்டணம் செலுத்தல் குறைவடைவதற்கு காரணமாக அமைந்தது. | |
| (ii) | 2021 ஜனவரி 01 ஆம் திகதி வரையிலான கடை வாடகை நிலுவைத் தொகை ரூ.9,370,439 என இருந்த போதிலும் அதில் ரூ.6,304,365 என்ற நூற்றுக்கு 67 வீதத்தை அறவிடுவதற்கு சபை தவறியுள்ளது. | காட்டப்பட்டுள்ள நிலுவைத் தொகையில் வாராந்த சந்தை யில் வியாபாரம் செய்ய முடியாது மீண்டும் சபையிடம் கையளிக்கப்பட்ட 12 சந்தைக் கடைகளின் நிலுவைகளும் உள்ளடங்கியுள்ளது. கொரோனா தொற்று நோய் காரணமாக வெட்டி நீக்கப்பட வேண்டிய கடை வாடகை ரூ.900,000 உம் இந் நிலுவைத் தொகையில் உள்ளடங்கியுள்ளது. சகல நிலுவைத் தொகைகளுக்குமான இறுதி அறிவிப்பு ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ளது. குறித்த காலக்கெடு முடிவடைந்ததன் பின் வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை கடை வாடகை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | கடை வாடகை குத்தகை ஒப்பந்தத்தில் 03 ஆம் பந்திக்கு அமைய 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு குத்தகை வாடகை தாமதிக்கப்பட்டால் குத்தகைதாரர் அவ் ஆதனத்தின் வியாபார உரிமையை இழப்பார் என காட்டப்பட்டிருந்த போதிலும் 03 மாதங்கள் தொடக்கம் 07 வருடங்கள் வரையான காலப்பகுதிகள் கொண்ட ரூ.10,478,176 க்கான நிலுவை வாடகை காணப்படும் 153 கடை அறைகள் காணப்பட்டதுடன் அக் கடை அறைகள் சம்மந்தமாக மேற்குறித்த பந்திக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கட்டணங்கள் காணப்படும் சகல கடை அறைகளுக்கும் வாராந்த சந்தை கடைகளுக்கும் இறுதி அறிவிப்பு அனுப்பப் பட்டுள்ளது. 14 நாட்கள் கடந்ததன் பின் சட்ட முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | குத்தகை ஒப்பந்தங்களின் படி பணியாற்ற வேண்டும். |
| (iv) | ஒப்பந்தப்படி 03 வருடம் அல்லது 5 வருடத்துக்கும் இடைப்பட்ட குத்தகை ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும் எனினும் 123 குத்தகை ஒப்பந்தங்களை | -அதே- | குத்தகை ஒப்பந்தங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் |

| | | |
|---|---|---|
| விட அதிகமான ஒப்பந்தங்கள் காலம் கடந்துள்ளன. எனினும் புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதே போல் குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படாமல் கடை அறைகள் குத்தகைக்கு விடப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | | குத்தகை ஒப்பந்தங்கள் அற்ற கடைகளுக்கு புதிய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மதிப்பாய்வு

-----------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மை

---------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதுகாப்புச் சேவை வழங்கற் பரிசோதனை<br>---------------------------- | | |
| 2017ஆம் ஆண்டு தொடக்கம் ஒரே நிறுவனத்திடமிருந்து பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் விலைமனுக் கோரலின்றி வருடா வருடம் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டுவரை வெஸ்ப்ரோ நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருந்தது. மேலும் பாதுகாப்புச் சேவை ஒப்பந்தத்தின் 04 ஆம் பிரிவின் படி ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு 12 மணி நேர சேவைக் காலத்துக்கு ரூ. 1,317 பணம் செலுத்தப்படுவதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருந்தது எனினும் அதற்கு எதிரான முறையில் 2021 செப்தெம்பர் மாதம் முதல் டிசம்பர் வரை ரூ.1,517 வீதம் பணம் செலுத்தப் பட்டிருந்ததன் காரணமாக (7148 x 200) ரூ.1,429,600 தொகை மேலதிகமாக பாதுகாப்புச் சேவைக்கு பணம் செலுத்தப் பட்டிருந்தது. | மேல் மாகாண பிரதம செயலாளரின் 2/8/2/1(1) ஆம் இலக்கமுடையதும் 2011.09.30 ஆம் திகதியுடையதுமான கடிதத்தின்படி மகரகம நகர சபைக்கு 2017 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் சேவையை பெற்றுக் கொள்வதற்கு மேல் மாகாண சபையில் பாதுகாப்புச் சேவை வழங்கும் நிறுவனமாக வெஸ்ப்ரோ நிறுவனத்துக்கு 2017.02.01 ஆம் திகதி முதல் வழங்குவதற்கு 2016.12.21 ஆம் திகதி நடைபெற்ற 3751 ஆம் இலக்கமுடைய நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.<br>அதன்படி வருடா வருடம் கால நீடிப்பு செய்யப்பட்டு வந்துள்ளது.<br>2021.10.28 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக் கூட்டத்தில் வெஸ்ப்ரோ நிறுவனம் சமர்ப்பித்துள்ள புதிய விலைகள் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளன. அதன்படி 2021 செப்தெம்பர் மாதம் முதல் | வருடாந்தம் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட வேண்டும். அதேபோல் ஒப்பந்தப் பிரகாரம் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

புதிய விலைமனுவின் படி சேவைக் கட்டனங்கள் செலுத்தப்பட்டுள்ளன. திருத்தம் மேற்கொள்ளப்பட்ட விலை மனுக்கள் உற்படுத்தப்பட்டு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டுக் கொள்ளல் தவறவிடப் பட்டுள்ளது. எனினும் அவ் விலை மனுவின் கீழ் 2022 ஆம் வருடத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

## 3.2 வினைத்திறன் அற்ற செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடை வாடகை ஒப்பந்தத்தின் படி குத்தகைதாரர் 06 மாதங்களைவிட அதிக காலம் வாடகை செலுத்தாது விட்டால் வாடகை ஒப்பந்தம் ஒருதலைப் பட்சமாக இரத்து செய்யும் அதிகாரம் நகர சபைக்கு உண்டு எனினும் 6 மாதங்கள் தொடக்கம் 3 வருடங்கள் வரை ரூ.7,058,936 தொகைக்கான வாடகைகள் செலுத்தப் படாமல் உள்ளன. இவ்வாராக 109 கடைகளின் வாடகை ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டு குறித்த கடைகள் நகர சபையால் கைப்பற்றப்பட தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கடை வாடகை ஒப்பந்தம் முடிவடைந்துள்ள அனைத்து கடைகளுக்கும் 2022.06.15 ஆம் திகதியிடப்பட்ட இறுதி அறிவித்தல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 14 நாட்களுக்குள் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாவிடின், அவை தொடர்பில் சட்ட முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வாடகை ஒப்பந்தப்படி பணியாற்ற வேண்டும். |
| (ஆ) | நாவின்ன விளையாட்டு மைதானத்தை சுவீகரிப்பது சம்மந்தமாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு தற்போதைய வருடத்தில் செலுத்தப்பட்ட ரூ.13,717,577 உள்ளடங்களாக மொத்தமாக ரூ.24,554,972 சபையினால் செலுத்தப் பட்டிருந்ததுடன் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை உறுதி ஒன்றின் மூலம் சபைக்கு உரித்தாக்கப் பட்டிருக்கவில்லை. | நாவின்ன விளையாட்டு மைதானத்தை மகரகம நகர சபைக்கு உரித்தாக்கிக் தருமாறு 2020.07.13, 2020.08.21, 2020.12.27 மற்றும் 2021.07.07 ஆகிய தினங்களில் வேண்டுகோல்கள் விடுக்கப்பட்டன. நகர அபிவிருத்தி அதிகார சபையின் காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பிரிவின் 10/2/1587 ஆம் இலக்கமுடையதும் | சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | 2020.06.10 ஆம் திகதியுடைய கடித்தின் ஊடாக மேலதிகமாக ரூ. 4,912,236 மிகுதிப் பணத் தொகையை செலுத்த வேண்டியுள்ளதாக அறிவித்துள்ளனர். இது தொடர்பான கலந்துரையாடலின் போது சபைக்கு உரித்தாக்கித் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. |

## 3.3 திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் குப்பைக் கழிவுகளை அகற்றும் 186 இடங்கள் காணப்பட்டபோதிலும் அவ் வர்த்தகர்கள் முறையாக ஒப்பந்தகளில் கைச்சாத்திடாமல் இருப்பதன் காரணமாக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | 2018 ஆம் ஆண்டிலிருந்தே முதல் முறையாக கழிவுப் பொருட்களுக்கான வரிகள் அறவிடப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் காணப்பட்ட கொவிட் தொற்று நிலவரம் காரணமாக அதிகளவான வர்த்தக நிலையங்கள் கழிவுப் பொருட்களுக்கான வரியைச் செலுத்த முடியாதென அறிவித்துள்ளனர். சில நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. ஏற்கனவே குறித்த நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான பணிகள் வகுக்கப்பட்டு வருகின்றன. | ஒப்பந்தங்கள் கைச் சாத்திடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சாராம்ச வருமான ஆவணத்தின் படி கழிவுப் பொருள் மூலம் பெறப்பட்ட வருமானங்களாக ரூ. 4,572,857 வாக காணப்பட்ட போதிலும் அட்டவணைப்படி கழிவுப் பொருள் மூலம் பெறப்பட்ட வருமானங்களாக ரூ.6,935,700 காணப்பட வேண்டும். எனவே கழிவுப் பொருள் மூலம் பெறப்பட்ட வருமானங்கள் ரூ.2,362,843 தொகை கணக்கில் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று நிலைமைகள் காரணமாக நாடு முடக்கப் பட்டதன் மூலம் கட்டணங்களை அறவிடுவதற்கு முடியாமல் போனதால் இந் நிலைமை உருவாகியுள்ளது. | சரியான வருமானங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 3.4 நடைமுறை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட தகவல்களின் படி 77 ஆதனங்கள் சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட போதிலும், நிலையான சொத்தக்களின் ஆவணங்களின் படி 46 ஆதனங்களில் 31 ஆதனங்களில் வித்தியாசங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அதே போன்று 38 ஆதனங்களின் பெறுமதி ரூ.10,969,916 என மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் ஏனைய ஆதனங்கள் மதிப்பீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்படுதல், மீள் மதிப்பீடு செய்தல், தற்போது பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல் தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்று சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். | சகல ஆதனங்களும் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன் ஆவணங்கள் முறையாக இற்றைப்படுத்தப்பட வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்ற 15 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூ.984,012 வும், சேவையை விட்டு விலகிச் சென்ற 19 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூ. 886,666 வும், இடமாற்றம் பெற்றுச் சென்ற 16 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூ.1,328,567 வும் என மொத்தமாக ரூ.3,199,245 க்கான கடன் மீதிகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகள் அறவிடப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | கடன் மீதிகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |